தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**7 வயதுப்பிரிவு**
(01.01.2016 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)

## அறம் காப்போம்

மனம், சொல், செயல் என்பவற்றைத் தீய வழியில் செல்லவிடாது வாழ்வது அறவாழ்வு. நாம் வாழ்வில் அறம் பேணி உயர்ந்தவர்களாக வாழ வேண்டும். தமிழில் உள்ள அறநூல்கள் எமக்கு வழிகாட்டுகின்றன. “அறம் தமிழர் வாழ்வின் உரம்” என்று வாழ்ந்து காட்டியோர் எம் முன்னோர்.

அறத்தின் வழிநின்று, இனத்தின் துயர் துடைக்கும் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்துபவர் தலைவர் மாமா. அவர் வழியில் போர் அறம் காத்தவர்கள் எங்கள் மாவீரர்கள். தியாகதீபம் திலீபன் மாமாவும் அன்னை பூபதியும் அறப்போர் தொடுத்து உயிர்க்கொடை தந்தவர்கள்.

போர்க்கால நெருக்கடியிலும் அறம் தவறாதவர்கள் தமிழர்கள். ஆனாலும், ஈழத்தமிழினம் தொடர்ந்தும் சிங்கள அரசுகளால் அழிக்கப்படுவது பேரவலம்! அறம் போற்றி வாழும் எம்மினம் வெல்ல வழி அமைக்க வேண்டும். மீண்டும் தமிழீழத் தாய்நாட்டில் அறம் அரசாள வேண்டும். அதற்காக அறம் காத்து, உறுதியோடு உழைப்போம்.

நன்றி,

வணக்கம்.